சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. 302 / 2017

மனுதாரர் / எதிர்மனுதாரர் ம.சா.2 வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திரு.முத்து அவர்களால் 44/1969 பிரிவின்படி 07.03.2023 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | ராஜகோகிலாதேவி | கிராமம் : | |
| க/பெ : | முருகானந்தம் | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

முதல் விசாரணை

நான் லாலாப்பேட்டை காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த நீதிமன்றத்தில் இருந்து எங்கள் நிலைய ஆய்வாளருக்கு வந்த சம்மனின் பேரில் நான் சாட்சி சொல்ல ஆஜராகியுள்ளேன். இந்த விபத்தில் அசோக் லைலான் தோஸ்த் TN45AB1839 வாகனத்தில் சென்ற அறிவழகன் மற்றும் வினோத்குமார் இறந்துவிட்டார்கள். அசோக் லைலான் தோஸ்ட் வாகனத்தின் ஓட்டுநர் அறிவழகன். மேற்படி அறிவழகன் மீதுதான் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விப்த்துசமயத்தில் மேற்படி அசோக் லைலான் தோஸ்ட் வாகனத்தில் வாழைக்காய் லோடு ஏற்றிக்கொண்டு திருச்சிக்கு சென்றுக்கொண்டிருந்தார்கள். மேற்படி அசோக் லைலான் தோஸ்ட் வாகனத்தில் டயர் வெடித்து எதிரில் வந்த லாரியில் மோதி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்திற்கு ஓட்டுநர் அறிவழகனின் கவனக்குறைவு தான் காரணம் என்று எங்கள் விசாரணையில் தெரியவருகிறது என்றால்சரிதான். அறிவழகன் சம்பவஇடத்திலேயே இறந்துவிட்டார். இந்த வழக்கில் குற்றவாளியான அறிவழகன் இறந்துவிட்டதால் இந்த விபத்து சம்பந்தமான குற்றவழக்கு அற்றுப்போனதாக முடிக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த விபத்திற்கு அறிவழகனின் அஜாக்கிரதையும் கவனக்குறைவும் தான் முழுக்காரணம் என்றால் சரிதான். TN45AB1839 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை உண்மைநகல் - சா.சா-ஆ.1. TN66M0519 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை உண்மைநகல் - சா.சா-ஆ.2.மாதிரி வரைபடம் உண்மைநகல் - சா.சா.ஆ.3 குற்றம் அற்றுப்போன அறிக்கை உண்மைநகல் - சா.சா.ஆ.4

2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

அசோக் லைலான்ட் தோஸ்ட் வாகனத்தை விபத்துசமயத்தில் ஓட்டிச்சென்ற இறந்துபோன அறிவழகனுக்கு விபத்துசமயத்தில் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யவில்லை

என்று சா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் புலன் விசாரணை மேற்கொள்ளவில்லை. முதல்தகவல் அறிக்கையும் நான் பதிவு செய்யவில்லை இத்ந விபத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரிதான்.

4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த விபத்து சம்பந்தமாக சதீஸ்குமார் என்பவர் புகார் கொடுத்துள்ளார். சம்பவம் 14.07.2017 ல் பிற்பகல் 3.00 மணியளவில் நடந்தது. சம்பவம் திருச்சி - கரூர் சாலையில் கருப்பத்தூர் அருகில் நடந்துள்ளது. அசோக் லைலான்ட் தோஸ்ட் TN45AB1839 வாகனம் விபத்து சமயத்தில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தக்கொண்டிருந்தது- அசோக் லைலான் தோஸ்ட் வாகனத்தின் இடது பக்க டயர் வெடித்து தான் எதிரில் வந்த லாரியில் மோதி விபத்து ஏற்பட்டது. எதிரில் வந்த லாரியின் பதிவெண் TN66M0519 என்றால் சரிதான். அசோக் லைலான் தோஸ்த் வாகனம் தான் டயர் வெடித்து சாலையின் நடுப்பகுதியை தாண்டி எதிரில் வந்த லாரியின் மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. லாரயின் ஓட்டுநர் சதீஸ்குமார் மீது எந்த தவறும் இல்லை என்றால் சரிதான். இந்த விபத்தில் அசோக் லைலான் தோஸ்ட் வாகனத்தின் ஓட்டுநரான அறிவழகன் மீது தான் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்ப்பபட்டுள்ளது என்றால் சரிதான்.

4ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஒம் /ராஜகோகிலாதேவி

ஒம்/ சண்முக கனி,
சார்பு நீதிபதி,
குளித்தலை.